மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 92/2025 |
| பெயர் | : | சக்கம்மாள் (PW1/LW1) |
| க/பெ | : | முத்துபாண்டி |
| வயது | : | 45 |
| கிராமம் | : | பசுவந்தனை |
| தாலுகா | : | ஓட்டப்பிடாரம் |
| Calling | : | கூலி |

(Accused Muthupandi is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of March 2026

<u>முதல் விசாரணை</u>

1)நான் பசுவந்தனையில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். சாட்சி வள்ளியம்மன் எனது அத்தை ஆவார். சாட்சி பாப்பா என்ற பாப்பாம்மாள் எனது சின்ன அத்தை ஆவார். ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். தேதி மாதம் நினைவில் இல்லை. கடந்த 1 வருடத்திற்கு முன்பாக மதியம் 11 மணியளவில் காளியம்மன் கோவில் அருகில் வைத்து ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு சண்டை போட்டார். பின்பு நான் தனியாக சென்றுவிட்டேன். மறுபடியும் பிரச்சனை பெரிதாகிவிடக்கூடாது என்பதற்காக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி புகார் வாக்குமூலம் மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இருக்கிறது என்றால் சரிதான். கடந்த 29.01.2025 அன்று காலை 11.30 மணியளவில் ஆஜர் எதிரியான என் கணவர் என்னை பார்த்து அசிங்கமாக திட்டி கையால் என்னை அடித்து உடம்பில் காயம் ஏற்படுத்தினார் என்றும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நாட்டு வைத்தியம் எடுத்துக்கொண்டேன் என்றும் இது விஷயமாக எனது கணவர் மீது

நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.